# யாழ். பிரச்சினை பற்றிய கொழும்பு மாநாடுக்கு அரசாங்க அதிபர், பிரதிநிதிகள் செல்லவில்லை'

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 27-1-86 திங்கள் (தை 14 ஜ. அவ். 16) முழக்கம் 352

## கிளிநொச்சி சம்பவ எதிரொலி

வடபகுதி இராணுவ முகாம்களைச் சுற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயம் சம்பந்தமாகவும், கோட்டை இராணுவ முகாமை அகற்றுமாறும் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை சம்பந்தமாகவும் பாதுகாப்பு அமைச்சில் இன்று நடைபெறவிருந்த முக்கிய மாநாடு வடபகுதியிலிருந்து செல்லவேண்டிய பிரதிநிதிகள் கொழும்பு செல்லாததால் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. வடபகுதிப் பிரஜைகள் குழுக்கள், அன்னையர் முன்னணி, முஸ்லிம் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் வர்த்தகர் பிரதிநிதிகள் இம்மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்த போதிலும், கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்களால் ஏற்பட்ட அச்சம் காரணமாக இவர்கள் கொழும்பு செல்லவில்லை. இம்மாநாட்டில் கலந்துகொள்ளவிருந்த அரசாங்க அதிபர் உட்பட மற்றும்பல அதிகாரிகளும் இதனால் கொழும்பு செல்லவில்லை. இதேவேளையில் கொழும்பில் இன்று நடைபெறவுள்ள டெக்கு, கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்களின் மாநாட்டிலும் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கலந்துகொள்ள மாட்டார்.

★ ஒட்டுசுட்டானில் பொலிஸுடன் போராளிகள் நேரடி மோதல்

# சார்ஜன்ட், கான்ஸ்டபிள் பலி

# பொதுமக்களில் 8 பேர் மரணம்

## இறைச்சிக்கடை முதலாளியும் பலி நான்கு ஆயுதப்படையினர் படுகாயம்

(மாங்குளம்)

ஒட்டுசுட்டானிலுள்ள இறைச்சிக்கடையொன்றின் முன்பாக நேற்றுக்காலை பத்து மணியளவில் பொலிஸாருக்கும் போராளிகள் குழுவொன்றுக்குமிடையே இடம்பெற்ற நேரடி மோதலில் பொலிஸ் சார்ஜன்ட், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரும், பொதுமக்களில் எட்டுப் பேரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

இச்சம்பவத்தின்போது மாட்டிறைச்சிக்கடை உரிமையாளரும் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறைச்சிவாங்க வந்த பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், போராளிகள் பதில்த் தாக்குதல் நடத்தியதாகவும் இங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் தரப்பில் மரணமான எட்டுப்பேரின் சடலங்களில் ஐந்து, பின்னர் இனம் தெரியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. படுகாயமடைந்த நான்கு பொலிஸார் அவசர சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

... 6ம் பக்கம் பார்க்க

## சோதனைமேல் சோதனையை அனுபவிக்கும் ஒரு குடும்பம்

"நானும் எனது மனைவியும் மற்றுமிரு பிள்ளைகளும் மதவாச்சிக்கு போவதற்காக பிற்பகல் இரண்டு மணியளவில் கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு சென்றோம். அப்போது குண்டுச்சத்தமொன்று கேட்டது. அதனையடுத்து இரு கவச வாகனங்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவாறு திருநகர் பக்கமாக சென்றன. அவை சென்ற சிறிது நேரத்தின் பின் சீருடையிலும் சிவிலுடையிலும் வந்த சுமார் பதினைந்து பேர் புகையிரத

...6ம் பக்கம் பார்க்க

( அமிர்தலிங்கம் சிறப்புப் பேட்டி 4ம் பக்கத்தில் )

## லலித் திடீர் யாழ். விஜயம்; தீவுப்பகுதிகளை பார்த்தார்

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வடபகுதியிலுள்ள முகாம்களுக்கு நேற்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு பாதுகாப்பு நிலைகளை ஆராய்ந்ததுடன் முக்கிய இராணுவ அதிகாரிகளுடனும் இது தொடர்பாக விரிவாக

—6ஆம் பக்கம் பார்க்க

அன்னையர் முன்னணி அழைப்பு:

## ஊர்வலம், மறியல்களில் அனைவரும் பங்குபற்றுக!

பாதுகாப்பு வலயத்திற்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், மறியற் போராட்டங்களில் மக்கள் அனைவரும் இணைந்து அதனைப் பலப்படுத்துமாறும், விஸ்தரிக்குமாறும் அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அன்னையர் முன்னணியின் செயலா

... 6ம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ராணுவம்சுட்டு 16வயது இளம்பெண் பலி

(வவுனியா)

வவுனியா மகாரம்பைக்குளம், பூந்தோட்ட பகுதிகளுக்கு நேற்று அதிகாலை நாலரை மணியளவில் சென்ற ஆயுதப் படையினர் அங்கு நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கந்தார் சின்னக்குளத்தைச் சேர்ந்த முருகேசு ஜெயலட்சுமி என்ற பதினறு வயது இளம் பெண் ஸ்தலத்தில் பலியானார்.

இங்கு அதிகாலையில் வெடிச் சத்தங்கள் கேட்டதை தொடர்ந்து வீடுகளிலுள்ளவர்கள் அச்சத்தால் அங்கும் இங்கும் ஓடியபோதே இப்பெண்ணுக்கும் துப்பாக்கிச் சூடுபட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் குருமன்காடு, வைரவப் புளியங்குளம் என்ற இடத்திலும்சிவில உடையில் சென்றும் தேடுதல் நடத்தினராம் சுமார் பதினைந்து பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

## திருநகர்பகுதி ரோந்தில் இரு பெண்களுக்குச் சூடு!

(கிளிநொச்சி)

திருநகர் பகுதிக்கு கவசவாகனங்களில் சென்ற இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் லூத்மேரி செபஸ்தியன், அரசரத்தினம் மல்லிகாதேவி ஆகிய இரு பெண்களும் காயமடைந்தனர்.

கனகபுரம், அம்பாள்குளம் பகுதிகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கு பலரைத் தடுத்து வைத்து விசாரணை செய்தனர். ஆறு பேர் கைதாகி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சின்னையா கமலா (15), நா. தர்மராஜா (25), பி. பாலகி

...6ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சி ரயில் நிலைய சம்பவத்தில்

## சுட்டுக் கொல்லப்பட்டோரில் பெண்கள், சிறுவர் அநேகம்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் ராணுவத்தின் சூட்டுக்குப் பலியான பத்துப்பேரில் அதிகமானவர்கள் பெண்கள், சிறுவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இரத்தினபுரத்தைச் சேர்ந்த பாண்டியன் சிவகுரு (26), 155ம் கட்டையைச் சேர்ந்த குலசேகரம் தங்கம்மா (64), உதயநகரைச் சேர்ந்த துரைச்சாமி கதிர்காமன் (18), வியா

...6ம் பக்கம் பார்க்க

நிலைமை ஆராய இன்று முக்கிய கூட்டம்:

## ஆஸ்பத்திரி நோயாளர் அனுமதிகுறைவு டாக்டர், தாதிகள் விடுதியில் தங்க அச்சம்

யாழ். அரசினர் வைத்திய சாலையில் பணிபுரியும் வைத்தியர்களும் ஏனைய ஊழியர்களும் புதிய பாதுகாப்பு வலய பிரகடனத்தையடுத்து எதிர் நோக்கிவரும் பிரச்சினைகள் பற்றிய ஆலோசனைக்கூட்டமொன்று இன்று நண்பகல் மேற்படி வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

சமீபநாட்களாக கோட்டை

...6ம் பக்கம் பார்க்க

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

### விற்பனைக்கு

ரோசா செடிகளுக்கான 'அதி விசேஷ உரம்' எங்களிடம். மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. Forage Stores, No. 208, 1 st Cross St , Jaffna. . P. 22611. R/16371

### விற்பனைக்கு

கருவாடுக்குத் தேவையான அரைத்த உப்புத்தூள் (50 கி. மூடை) விற்பனைக்குண்டு. M. G M. Forage Stores. No. 208, 1st Cross St. and 781, K. K. S. Rd., Jaffna

R/16370

### திட்டப்பரிசு பெறுபவர்

அங்கத்துவ நண்பர்களினால் தெரிவு செய்யப்பெற்ற இம்மாதத்திற்குரிய பரிசைப் பெறுபவர் திரு. க. செல்வநாயகம் சோதி, வேம்படி, மானிப்பாய். இத்திட்டம் எவ்வித முதலீடுகளுமின்றி தினசரி வருவாய்கள மாதாந்த அதிஷ்டம்/ருதுவானாலும் / திருமணமானாலும் / பிரசவமானாலும் / விபத்தானாலும் / மரணமானாலும் ஏராளமான நன்கொடைகளும் / கடன்களும் ஒருங்கேயமைந்தது. தொகுதிகள் தோறும் பிரதிநிதிகள் தேவை. சேராதவர்கள் சேரலாம். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும். லக்கி பெனிபிட்கோ லிமிட்டட், பொதுச்சந்தை, கோப்பாய்.

R/16380

### சீட்டிழுப்பு

25-1-86 அன்று அதிஷ்டம் பார்க்கப்பட்ட அராலி களவத்துறை ஞானவைரவராலய சீட்டிழுப்பு விபரம். அதிஷ்டம் பார்க்கப்பட்ட திகதியிலிருந்து பதின்நான்கு நாட்களுக்குள் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும். 1-ம் பரிசு 1133, 2-ம் பரிசு 1217, 3-ம் பரிசு 1288.

R/16384


# 1976க்கு முன் பட்டம்பெற்ற அனைவருக்கும் வேலை வேண்டும்

1976ம் ஆண்டுக்கு முன் பட்டம் பெற்ற பட்டதாரிகளையும், பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தில் சேர்த்து அவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

தற்பொழுது 1976ம் ஆண்டுக்குப்பின் பட்டம் பெற்றவர்களுக்கே இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது. இதுசம்பந்தமாக கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்த சமயம் 1976ம் ஆண்டுக்கும்முன் பட்டப்பெற்றோர் அது சம்பந்தமாக சங்கம் ஒன்றை உருவாக்கிதம்முடன் தொடர்பு கொண்டால் அவர்களின் கோரிக்கை பற்றி கவனத்திற்கு எடுக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளதாம்.

இதனை அடுத்து 1976ம்ஆண்டுக்குமுன் பட்டம் பெற்று இது வரை வேலைவாய்ப்பைப் பெறுதவர்கள் சங்கமொன்றை உருவாக்க தற்பொழுது முயற்சி எடுத்து வருகின்றனர்.

1976ம் ஆண்டுக்குமுன் பட்டம் பெற்றுவெளியேறியோரில் பலர் இன்னமும் தொழில் வாய்ப்பின்றி இருந்து வருவதும், அவர்களுக்கு பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தின்கீழ் போதிய நிவாரணம் வழங்கப் படாமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

### பருத்தித்துறையில்

# கடைகளை மீண்டும் திறக்க சங்கம் வேண்டுகோள்

(புலோலி)

அண்மையிலேற்பட்ட பதற்றத்தினால் பருத்தித்துறை நகரில் மூடப்பட்ட சகல கடைகளையும் உடனடியாகத் திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்குமாறு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அவசர வேண்டுகோள் ஒன்றை பருத்தித்துறை நகர வர்த்தகர்களுக்கு விடுத்துள்ளது.

பருத்தித்துறைப் பகுதி மக்களின் நன்மை கருதி பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தால் வர்த்தகர்களுக்கு விடுக்கப் பட்டுள்ள வேண்டுகோளில் கேட்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை நகர வர்த்தகர்களே நீங்கள் உடனடியாக உங்கள் வியாபார நிலையங்களைத் திறந்து வியாபாரமுயற்சிகளை ஆரம்பியுங்கள். சில நகர வர்த்தகர்கள் நிலையங்களிலிருந்து வர்த்தகப் பொருட்களை அகற்றியதை நாங்கள் அறிவோம். நீங்கள் உடனடியாக கடைகளை திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்கா விட்டால் வாடகைக்கு குடியிருந்து வியாபாரம் செய்த உங்களுடைய வெற்றுக் கடைகளுக்கு நாங்கள் எச் சூழ் நிலையிலும் வியாபாரம் தொடர்ந்தும் செய்யக்கூடிய நபர்களை அமர்த்துவோம். இந்தக் கடுமையான முடிவுக்கு எம்மைத் தள்ளியதற்கு நீங்களே காரணமாவீர்கள். எனவே நீங்கள் உடனடியாக உங்கள் வியாபாரங்களை திறந்து வியாபாரம் செய்வீர்களென நம்புகிறோம்.

வர்த்தக சங்கத்தின் இவ் வேண்டுகோளையடுத்து நகரில் பல கடைகள் திறக்கப்பட்டுள்ளன.






## பிறந்தநாள் வாழ்த்து

❀ முருங்கன் நடராஜா தம்பதியின் மகள் தேவகி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❀ அச்சுவேலி தெற்கு நாகமுத்து மகேஸ்வரி தம்பதியின் மகள் யாழினி இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

# ஊர்காவற்றுறைக் கண்டன ஊர்வலம்நாளைநடைபெறும்

புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று இம் மாதம் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறைப் பகுதியில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை இங்குள்ள பல்வேறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று செய்து வருகின்றது.

ஊர்வல முடிவில் ஜனாதிபதிக்கான மகஜரொன்று ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப் படும்.

# வாகனம் மூலம் மக்கள் மத்தியில் பிரச்சாரம்

(நீர்வேலி)

யாழ். மாவட்டத்தில் பிரதான வீதிகள், சந்திகள் உட்பட பல இடங்களிலும் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஓர் வாகனத்தில் இருந்து ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயச் சட்டப் பிரகடனத்திற்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன.

"யாழ்ப்பாணப் பகுதி மக்களது பாரம்பரியப்பிரதேசங்கள் பறிபோகும் நிலை. அராஜகப் போக்கைக் கடைப்பிடிக்கும் ஸ்ரீலங்கா இனவாதஅரசுதமிழ் மக்கள் மீது இனவாதப் போக்கைக்கடைப்பிடிக்கிறது. இவற்றின் காரணமாக ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயச்சட்டத்தால் மாணவர் கல்வி, வியாபாரம், அன்றாடக் காரியங்கள், போக்குவரத்து, உடைமைகள் என்பன பறி போகும் நிலை. ஆகவே தமிழ் மக்களாகிய ஒவ்வொருவரும் ஒன்றுபட்டு செயற்படுவதாலும் சரியான புரிந்துணர்வைப் பின்பற்றுவதாலும் மாத்திரமே எமது பிரதேசத்தை நாம் பாதுகாக்கலாம். இவற்றோடு "ராணுவத்தை எமது பிரதேசத்தில் இருந்து வெளியேற்று, பாதுகாப்பு வலயத்தை உடன் அகற்று" போன்ற கோஷங்களும் ஒலிபரப்பப்பட்டன.

இவ்வொலிபரப்பில் ஆண், பெண் குரல்கள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இழுபறியில் சுமுகத்தீர்வு கிட்டும்?

(அராலி)

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் அராலி - உப அலுவலகத்திற்கென நிர்மாணிக்கப்படவிருந்த புதிய கட்டிடத்திற்கான நிர்மாண வேலைகள், கட்டடம் அமைக்கப் படும் காணியைத் தெரிவுசெய்வது தொடர்பாக இப்பகுதி மக்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக பெரிதும் தாமதமடைந்திருந்தன.

கடந்த வாரம் அதிகாரிகள் மட்டத்திலான குழுவொன்று மேற்கொண்ட நேரடி விசாரணைகளையடுத்து இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பத்தில் பிரச்சினையெதுவுமின்றி காணியொன்று தெரிவுசெய்யப்பட்டதாயினும் பின்னர் அக்காணியில் கட்டடம் அமைக்கப்பட முடியாமற்போனதைத் தொடர்ந்தே கருத்துவேறுபாடுகள் ஆரம்பமாகின.

# தெரிவானார்

(வவுனியா)

செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்ட சூடுவெந்த பிலவு கிராமோதய சபைத் தலைவராக திரு. கே. அருள்ராஜா ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவு சமாஜத்தின் இயக்குனர் சபையின் முக்கிய உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அழிப்பு

(நெடுங்கேணி)

நெடுங்கேணி பகுதிகளில் உள்ள வயல்களில் பெரும்பாலானவை பன்றிகளால் அழிக்கப்படுகின்றன. பன்றிகளை ஒழிப்பதற்கு ஏற்ற ஆயுதங்கள் இப்பகுதி விவசாயிகளிடம் இல்லாதிருப்பதினால் இவற்றின் தொல்லைகளிலிருந்து பயிர்களை பாதுகாக்க முடியாமலுள்ளது.

இப்பகுதியில் மிளகாய்ச் செய்கையும் இம்முறை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளமைஇங்குகுறிப்பிடத்தக்கது.

# இடமாற்றம்

(ஏழாலை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமைபுரிந்த செல்வி யசோதா நடராசா யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு விளையாட்டுப் போதனாசிரியையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவியான இவர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் அடைக்கலம் புகுந்த போது சுட்டுக்கொல்லப்பட்ட பலருள் ஒருவரான நடராசாக் குருக்களின் மகளாவார்.


## நொதேண் இன்ஸ்ரிரியூட்

(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

கிறிஸ்தவம்

A/L 86 மீட்டல் வகுப்பு

A/L 87 க்குரிய வகுப்புகள்

ஆசிரியர்: திரு. யேசுரெட்ணம், B. A.

(மறைக்கல்வி ஆசிரியர்)

(எமது நிறுவனத்தில் மட்டுமே இப்பாடநெறி கற்பிக்கப்படுகின்றது)

O/L IIம் பிரிவு ஆரம்பம் 3-2-86 R/16382

ஈழமுரசு



மாரியம்மன் வழிபாடு:

# பண்டைய மகாத்மியம் உள்ளது தெளிவானது

(புங்குடுதீவு)

"மாரியம்மன் வழிபாடு பண்டைக் காலம் முதல் தமிழ் நாட்டில் நிலைபெற்று வந்துள்ளது. கிராமப்புற மக்கள் மாரியம்மன் மீது கொண்டிருந்த பக்தியினை நமது இலக்கியங்களில் மட்டுமன்றிச் சமய வழிபாட்டு முறைகளிலும் நன்கு காண முடிகிறது. இந்தவகையில் இங்குள்ள மக்கள் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்குப்பெரும் கோயில் எழுப்பியுள்ளதுடன் இராச கோபுரமும் அமைத்துள்ளமை போற்றுதற்குரியது."

இவ்வாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய இராச கோபுர மகா கும்பாபிஷேக விழாவில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "சமய பக்தியும், தெய்வ நம்பிக்கையும் பெருக இத்தகைய திருப்பணிகள் பெரிதும் உதவு''மென்றார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. சி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், வித்துவான் பொன். அ. கனகசபை ஆகியோரும் உரையாற்றினர்.

பருத்தித்துறையில்

# அரச அலுவலகம் எதுவும் இடம் மாற்றப்படவில்லை!

(புலோலி நிருபர்)

பருத்தித்துறை நகரிலிருந்து எந்த அரசாங்க அலுவலகமும் இடமாற்றம்செய்யபடவில்லை. தற்காலிகமாக பருத்தித்துறை சிவன் கோவிலடிக்கும், மருதடிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த பொதுசனச் சந்தை மீண்டும் பருத்தித்துறை நவீன சந்தைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மீன் சந்தையும் பருத்தித்துறை 1-ம் குறுக்குத் தெருவில் உள்ள மீன் சந்தைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை புலோலி கமநலச் சேவை நிலையத்திற்கு மாற்றப்படுமென அறிவிக்கப்பட்டிருந்த போதும் இறுதியில் அம் முடிவு மாற்றப்பட்டதனால் மீண்டும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முன்பு இயங்கிய கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது.

பருத்தித்துறை இலங்கை வங்கி, பருத்தித்துறை நெல்லியடி மக்கள் வங்கி, பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி என்பன பருத்தித்துறை நகரிலேயே இயங்கி வருகின்றன. இவ் வங்கிகள் நாள்தோறும் திறக்கப்பட்டு 2 மணி நேரம் வாடிக்கையாளர்களின் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் கல்லூரி வீதியிலேயே இயங்கி வருகின்றது. பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் பருத்தித்துறை யாழ். வீதியிலுள்ள புலோலி வேலாயுதம் ஆண்கள் மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டு நடைபெற்று வருகின்றது. பருத்தித்துறை பஸ் சேவைகளும். மினி வான் சேவைகளும் நகரில் உள்ள தத்தமது நிலையங்களிலிருந்து ஆரம்பமாகின்றன.

பருத்தித்துறை நகர வர்த்தகர்கள் மெல்ல மெல்ல கடைகளைத் திறந்து வருகின்றனர். அநேகமான கடைகள் ஒற்றைக் கதவிலேயே திறக்கப்படுகின்றன. சந்தைகளுக்கு காலை வேளையில் வரும் பொது மக்கள் கெதி கெதியாகப் பொருட்களை வாங்கிக் கொண்டு விரைகின்றனர். சன நடமாட்டம் குறைவாகவே காணப்படுகின்றன.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் என்பன மீண்டும் முன்னர் இயங்கி வந்த கட்டடங்களிலேயே இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரிலிருந்து பொருட்களை அப்புறப்படுத்திய பல வர்த்தகர்கள் மீண்டும் பொருட்களைக் கொண்டு வந்து தமது நிறுவனங்களில் இறக்குவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

பருத்தித்துறை – யாழ்ப்பாணம் வீதியில் பருத்தித்துறை நகரையடுத்துள்ள பகுதிகளில் பல புதிய கடைகள் திறக்கப்பட்டுள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது. கடந்த புதன் கிழமையும் பருத்தித்துறை நகரில் கடைகள் மூடப்பட்டிருக்கவில்லை. நெல்லியடி, புலோலிப் பகுதியில் வியாபார நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த போதும் அரச அலுவலகங்கள் ஒழுங்காக இயங்கின, பஸ் சேவைகளும் மினி வான் சேவைகளும் நடைபெற்றன.

# உடன்பாடு

(அராலி)

பல வருடங்களாக அராலியிலிருந்து யாழ்ப்பாணம் வரை அலுவலர்கள், . தொழிலாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் பயணிகளைக் காலையிலும் மாலையிலும் ஏற்றி சேவையிலீடுபட்டு வந்த தனியார் வாகனமொன்றின் உரிமையாளருக்கும். அராலி ஊடான சித்தன்கேணி யாழ்ப்பாணம் மினிபஸ் உரிமையாளர் சங்கத்துக்கும் இடையே நிலவிவந்த தகராறு, இயக்கமொன்றின் உதவியுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வழமையான நேரத்தில் வட்டுக்கோட்டைச் சந்தியிலிருந்து சேவை நடாத்த அனுமதிப்பது என்ற சங்கத்தின் உறுதிமொழியின் பேரிலேயே உடன்பாடு காணப்பட்டுள்ளது

# வவுனியா மாவட்ட புனர்வாழ்வு ஏற்பாடு குறிப்பிட்ட ஒரு சாரார் புறக்கணிப்பா?

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் புனர்வாழ்வு நடவடிக்கைகளின் மூலம் குறிப்பிட்ட ஒரு சாராருக்கு புதுவாழ்வு அளிக்க வேண்டாம் என்று உயரதிகாரிகளுக்கு, பாதுகாப்புப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். இதனால் இம்மாவட்டத்தில் இருந்து வெளியேறி அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களை மீண்டும் குடியமர்த்துவதில் பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

மலைப்பிரதேசத்தில் ஏற்பட்ட இனக்கலவரங்களைத் தொடர்ந்து, பாதுகாப்புக் கருதி ஆயிரக்கணக்கான இந்திய வம்சாவழியினர் வவுனியா மாவட்டத்தில் குடியேறினர்கள். இவர்களுக்கு (காந்தீயம் போன்ற) பொதுநல ஸ்தாபனங்கள் உதவிகள் புரிந்தன.

ஜனாதிபதியின் உத்தரவுக்கிணங்க, இவ்வாறு குடியேறியவர்களில் குடியுரிமை பெற்றவர்களுக்கும், குடியுரிமை கோரி விண்ணப்பித்தவர்களுக்கும் உணவு உற்பத்தி காணி அனுமதியின் கீழ் காணிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலச் சம்பவங்களைத் தொடர்ந்து அகதிகளாகிய 12 ஆயிரத்து 500 குடும்பங்களில் இவர்களிலும் கணிசமான தொகையினர் அடங்குவர். அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள இந்தவேளையில் மேற்கண்டவாறு குடியேறியோரை (காந்தீயத்தின் உதவிகளைப் பெற்றோர்) குடியமர்த்த வேண்டாம் என்று அறிவித்திருப்பது பலருக்கும் அதிர்ச்சியாக உள்ளது.

யாரைக் குடியமர்த்துவது, யாரைக் குடியமர்த்தாமல் விடுவது என்று பிரித்தறிவது இயலாத காரியம் என்றும், சட்டத்திற்கமைய குடியேறியவர்களுக்கு, பாதிக்கப்பட்ட நிலையில் புனர்வாழ்வளிக்க மறுப்பது மனிதாபிமானமற்றதாகும் என்றும், இதுபற்றி விசாரித்த போது உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளையில் அகதிகளுக்கு இவ்வாறு பிரித்தறிந்து புனர்வாழ்வளித்தால், புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொண்ட பின்னரும் இம்மாவட்டத்தில் அகதி முகாம்கள் இயங்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆராய்வு

(வவுனியா)

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, அனுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களும் இணைப்பதிகாரிகளும் அனுராதபுரத்தில் சந்தித்து அகதிகளாக தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளவர்களை மீண்டும் குடியமர்த்துவது தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார்கள்.

அகதிகளுக்கு புனர் வாழ்வு அளிப்பதில் உள்ள நடைமுறை கஷ்டங்களையும், புனர் வாழ்வு பற்றிய அகதிகளின் மனோ நிலைமையையும் இங்கு எடுத்துரைக்கப்பட்டதாம்.

கலந்துரையாடலின் பின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

யாழ். பயணத்தின் போது

# தீவுப்பகுதி பயணிகளின் முகத்தில் மரணக்களை

(வேலணை)

புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் தீவுப்பகுதி மக்கள் தமது பிரயாணத்தை பண்ணையின் ஊடாக செல்லும்போது தங்களது உயிரை கையில் பிடித்துக்கொண்டே செல்லவேண்டியுள்ளது.

எந்த நேரத்தில் என்ன சம்பவங்கள் நடக்குமோ என்ற அச்சம் நிலவுகின்றது. பண்ணையூடாக செல்பவர்களை அவதானித்தபோது அவர்கள் முகத்தில் மரணக்களை தென்படுவதை அவதானிக்க முடிகின்றது முன்பெல்லாம் இங்கிருந்து யாழ்நகருக்கு செல்லும் வாகனங்கள் கோட்டையருகாமையில் முற்றவெளிக்கு அண்மையாகச் சென்றுவந்தன. தற்போது வாகனங்கள் யாவும் பீதி காரணமாகப் பொலிஸ் விடுதிக்குப் பின்புறமாகச் சென்று கொட்டடி ஊடாக பட்டணத்தை அடைகின்றன.

பண்ணை திருப்பத்தை தீவுப்பகுதி மக்கள் மரணப் பொறி என அடைமொழி வைத்து அழைக்கின்றனர். இதனைத் தாண்டி அந்தப்பக்கமோ, அன்று தீவுப்பகுதி பக்கமோ வந்தால்தான் அவர்களது மனம் நிம்மதிப் பெருமூச்சுவிடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. புதிய சட்டத்தினால் தீவுப்பகுதியில் இருந்து அடிக்கடி பயணம் செய்வதை பலர் தவிர்த்துள்ளனர்.

## சிங்களத்தில் மறுபிரசுரம்

(வவுனியா)

மல்லிகை இலக்கிய சஞ்சிகையில் அண்மையில் வெளிவந்த திரு. சிதம்பர திருச்செந்திநாதனின் "அகதி முகாம்'' என்ற சிறுகதை, சிலுமின சிங்கள வாரப் பத்திரிகையில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. பிரபல சிங்கள எழுத்தாளரான திரு. கே. ஜி. அமரதாச இதனை மொழிபெயர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருக்கு பாராட்டு

(நல்லூர்)

"யாழ் மாநகரசபையின் செயலகத்தை தமிழ் மக்களின் தலைநகராக விளங்கிய நல்லூருக்கு மாற்றியமைக்க ஏற்பாடு செய்வதனையும், பண்டைய பாரம்பரிய கலை, கலாச்சாரங்களை நினைவுறுத்தி இன்றைய கால சூழ்நிலையில் யாழ்ப்பாண மாநகரத்தில் வாழும் சகல மக்களும் பயன்பெறக்கூடிய வகையில் புதிய செயலகத்தை நிர்மாணிக்க ஏற்பாடு செய்து வரும் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சீ. வீ. கே.சிவஞானம் அவர்களின் முயற்சிக்குப் பாராட்டு தெரிவித்து அகில இலங்கைத் திருவள்ளுவர்மகாசபைகடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

மகாசபைத் தலைவர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் கையொப்பமிட்டு இக்கடிதத்தை எழுதியுள்ளார்.

## அதிபரின் ஆதங்கம்

(நெடுங்கேணி)

நெடுங்கேணி மகா வித்தியாலயம் இட நெருக்கடி, ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட வசதியின்மை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது இப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் அதிக மாணவர்கள் கல்வி கற்கும் இங்கு இக்குறைபாடுகள் நிலவுவது குறித்து அதிபர் திரு. கா. தம்பு கவலை தெரிவித்தார். இப்பாடசாலையில் அகதியாக வந்த பல மாணவர்களும் கல்வி கற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

பிரயாணிகள் எதிர்பார்ப்பு

# தீவுப் பகுதியில் இ. போ. ச பஸ் சேவை சீராகும்?

(வேலணை)

இ. போ. ச. பஸ்சிலும் பார்க்க தீவுப்பகுதியில் சேவையிலீடுபடுத்தப்படும் மினி பஸ்கள் அதிக கட்டணம் அறவிடப்படுவதாகப் பல புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது சம்பந்தமாக இப்பகுதிப் பிரயாணிகள் வட பிரதேச போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகளைச் சந்தித்து தங்களுக்குப் பிரயாணம் செய்வதில் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துக் கூறி மினி பஸ்களில் அதிக கட்டணம் அறவிடப்படுவதால் தங்களுக்குச் சிறந்த முறையில் பஸ் சேவைகளை நடாத்தும்படியும் கேட்டுள்ளனர்.

இவர்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள் வெகு விரைவில் தீவுப் பகுதி பஸ் சேவைகளை அதிகரிப்பதாகவும், வசதியான சிறந்த பஸ்களைச் சேவையில் விடுவதெனவும் உறுதியளித்துள்ளனர்.

இதே நேரத்தில் இ.போ.ச. பஸ்ஸில் பிரயாணத்தை மேற்கொண்டால் குறைந்த கட்டணத்தில் பிரயாணம் செய்வதுடன், இ.போ.ச.வையும் ஊக்கப்படுத்த முடியுமென பிரயாணிகள் கருதுகிறார்கள்.

## தட்டுப்பாடு

(வேலணை)

வேலணை பிரதம தபால் கந்தோரிலும் ரோளாவத்தை, சரவணை, மண்கும்பான், வேலணை தெற்கு, துறையூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள உப தபாலகங்களிலும் முத்திரைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

விலை குறைந்த முத்திரை தொடக்கம், விலை அதிக முத்திரை வரைக்கும் இத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் காரணத்தினால் வெளிநாடுகளுக்கும், உள்ளூர் தேவைகளுக்கும் கடிதம் அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் வேறு பல தேவைகளுக்கும் முத்திரைகள் பெற முடியாதுள்ளது. கொழும்பிலிருந்து முத்திரைகள் இங்கு அனுப்பிவைக்கப்படாததே இத் தட்டுப்பாட்டிற்கு காரணமென மேற்படித் தபால் நிலையங்களின் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

## நடுநிசி சோதனை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயச் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடுநிசி முதல் காலைவரை இராணுவத்தினர் வீதிச் சோதனைகளை மேற்கொண்டனர்

இதனால் ஆலயங்கள், தோட்டங்கள் என்பவற்றுக்குச் சென்றவர்கள் பீதி காரணமாக திரும்பிச் சென்றனர். பாடசாலைக்கு சென்ற மாணவர்களின் புத்தகங்கள் கூட அங்கு படையினரால் சோதனையிடப்பட்டனவாம். இவர்கள் கருவேலங்கண்டல்வரை நடையில் சென்று பின் அங்கிருந்து ட்ரக் வண்டியில் முகாமுக்கு திரும்பிச் சென்றனர்.

### உதய சிந்தனை

கடவுள் பூமியைப் படைத்தார். வானத்தைப் படைத்தார். விரிந்து கிடக்கும் கடலைப்படைத்தார். ஆனல் அடிமையை மட்டும் படைக்கவில்லை.
—ஜார்ஜ் வாஷிங்டன்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி/ 23336

## இதய ஒலி

27-1-86 திங்கட்கிழமை (குரோதன) தை-14

# இது கூடவா புரியவில்லை!

நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த ஒரு வாரகாலத்துக்குள் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களை இரைமீட்டுப் பார்க்கவேண்டிய ஒரு தேவை இப்போது அத்தியாவசியம் போலத் தென்படுகின்து.

இரைமீட்பது என்று சொல்வதிலும் பார்க்க, ''பிரேத பரிசோதனை'' செய்து பார்த்தல் என்று சொல்வது மேலும் பொருத்தம் போலத் தெரிகின்றது.

மட்டக்களப்பில் இருதயபுரம் என்ற இடத்திலும், யாழ்ப்பாணத்தில் கட்டுவன், தெல்லிப்பளை, ஏழாலை, குரும்பசிட்டி ஆகிய இடங்களிலும், கிளிநொச்சியில் நேற்று முன்தினமும் இடம்பெற்ற அநியாயப் படுகொலைச் சம்பவங்களை, மக்கள் நினைவு கொள்ளல் வேண்டும்.

''தாக்கினல் மட்டும் பதில் தாக்குதல் நடைபெறும்'' என்று திருப்பித் திருப்பிக் கூறிக்கொண்டு, அப்பாவிகளை, எதுவுமே அறியாத ஏழைத் தமிழர்களை, எதற்காகக் கொன்று குவிக்க வேண்டும்?

இருதயபுரத்தில் கொல்லப்பட்ட இருபத்தொரு பேரின் சடலங்கள் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படாது ஆயுதப் படையினராலேயே தகனம் செய்யப்பட்டன.

தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளில் பதினெரு பேர் துப்பாக்கிக்கும், பீரங்கிக் குண்டுகளுக்கும் தங்கள் உயிரை அர்ப்பணித்துள்ளனர்.

அது போதாதென்று ''பயங்கரவாதிகள்'' என்று பட்டமும் சூட்டப்பட்டுள்ளனர்.

குரும்பசிட்டி, ஏழாலைப்பகுதிகளில் நடைபெற்றது என்ன?

கணவனைப் பறிகொடுத்த மனைவியின் சோகக் கதையை நாம் பிரசுரித்திருந்தோம்.

தனது பெருமகனுக்கு வழங்கப்பட்ட கொலையை நேரில் பார்த்துக்கொண்டிருந்த சிறிய தகப்பனின் வேதனைக் குரலை நாம் எழுத்தில் வடித்திருந்தோம்.

சூட்டுக்குப் பலியானவரின் மரணச்சடங்கில் கலந்துகொள்ளச் சென்ற இருவர் ஹெலிகப்டர் சூட்டினல் காயமடைந்த சம்பவமும் இரு தினங்களுக்கு முன்னர் தெல்லிப்பளையில் இடம் பெற்றுள்ளது.

ஜனநாயகமும், தார்மீகமும் அரசோச்சும் இந்த மண்ணில் தான் இவைகள் நடைபெறுகின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் திருமலை இந்து மயானத்தில் மரணச்சடங்கில் கலந்துகொள்ளச் சென்ற ஒருவர் ராணுவச் சூட்டுக்குப் பலியானதாகச் செய்தி வெளியிட்டபோது, பலரும் அதனை நம்ப மறுத்தனர்.

தெல்லிப்பளைச் சம்பவம், அக்கிரமக்காரர்களின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடந்தது என்ன?

ரயில் ஏற நின்றவர்கள் மீதும், அவர்களை வழியனுப்ப வந்தவர்கள் மீதும் சூடு நடத்தவேண்டிய தேவை எதனல் ஏற்பட்டது.

எங்கோ இரண்டு குண்டுகள் வெடித்ததாம்! அதற்குப் பழி வாங்கலா இது?

எவருக்குமே தெரியாத குண்டுகள் வெடித்தவிதமே சந்தேகத்துக்கிடமான விடயமாக இருக்கையில், அந்தக் குண்டுகளைக் காரணம் காட்டி, அப்பாவித் தமிழர்களைக் கொலை செய்வதானல், இதனையிட்டு எந்த விசாரணையுமே நடைபெறுவதில்லையானல், தமிழ் பிரதேசங்களில் ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படவில்லையென்றே சொல்லவேண்டும்.

ஆடுவெட்டவும், மாடுவெட்டவும் சுகாதாரப் பகுதி அதிகாரியின் சில் அடிக்கப்படவேண்டும் என்கிறது சட்டம்.

யானையையும், மானையும், மயிலையும் கொல்பவர்களைச் சட்டம் தண்டிக்கிறது.

கடலில் ஆமையைப் பிடிப்பதுகூட தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனல் தமிழனைக் கொன்று குவிப்பதற்கு எந்தத் தடையுமில்லை

தமிழர் படுகொலைகளைத் தடுப்பதற்கு எந்தச் சட்டமும் கிடையாது

தமிழரைத் தீர்த்துக்கட்டுவதன் மூலம், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் திட்டம் இது.

கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் ஒழிப்புப் படலம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது,

மக்களுக்கு இதுகூடவா இன்னும் புரியவில்லை!

★ கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கம் ஈழமுரசுக்கு அளித்த விஷேட பேட்டி

# சுவிஸிலுள்ள தமிழ் அகதிகள் திரும்பி வரமாட்டார்கள்!

அண்மையில் லண்டன்சென்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், அங்கிருந்து பல மேற்கு நாடுகளுக்கும் சென்றிருந்தார். மீண்டும் இவர் லண்டன் சென்ற சமயம் எமது லண்டன் நிருபர் ர. ஜெ. கொன்ஸ்டன்ரைன் அவரை அங்கு பேட்டி கண்டார்.

சுமார் நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு இடம்பெற்ற இப்பேட்டியில் அவரது சுவிட்சர்லாந்து விஜயம், கூட்டணி எம்.பீக்கள் கொலை நிலைமை, கூட்டணியின் மாற்று யோசனை போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் கருத்து வெளியிடப்பட்டது.

இப்பேட்டியைக் கேள்வி—பதில் வடிவத்திலேயே இங்கு தருகின்றோம்:-

கேள்வி; நீங்கள் கடந்த இரண்டு மாதங்களில் பல ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளீர்கள். உங்களின் இந்த நீண்ட நாள் விஜயத்தின் முக்கிய நோக்கம் என்ன?

பதில்: பல நாடுகளில் அகதிகளாக வந்த எமது இளைஞர்களை திருப்பி அனுப்புவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. இதில் முக்கியமாக சுவிற்சலாந்திலிருந்து தமிழர்களை அனுப்ப முயற்சிக்கப்படுவதாக அறிந்தேன். இதை நிறுத்தவே இவ் திடீர் விஜயத்தை மேற்கொண்டேன்.

கேள்வி: சுவிற்சலாந்தில் மட்டுமல்ல ஜேர்மன், பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் இம் முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நாடுகளுக்கும் நீங்கள் சென்று பேச்சுவார்த்தைகள் நடாத்தினீர்களா?

பதில்: இல்லை. சுவிற்சலாந்தில் மட்டும் தான் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படல் வேண்டுமென்ற அபிப்பிராயம் வளர்ந்து வருகின்றது. அதனல் அங்கு சென்று இலங்கையின் உண்மையான நிலை பற்றி பிரச்சாரம் செய்தேன். அது மட்டுமல்ல என்னை அங்கு வரும்படி தமிழர்கள் மீது மிகுந்த அனுதாபம் வைத்திருக்கும் சோஷலிச பாராளுமன்ற உறுப்பினர் திரு ஓட்க் என்னிடம் கேட்டுக்கொண்டார்.

கேள்வி: உங்களுடைய முயற்சி முழு வெற்றியளிக்கும் என நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: ஆம். ஏனெனில் என்னை அங்கு அழைத்த பாராளுமன்ற உறுப்பினரின் பெரு முயற்சியினல் நான் அங்கு பலரைச்சந்திக்கக் கூடியதாக இருந்தது. அதில் குறிப்பாக சுவிஸ் தலைமை பொலிஸ் அதிகாரி, அகதிகள் பொறுப்பு அதிகாரி, மற்றும் பல பா.உறுப்பினர்களை சந்தித்தேன் அது மட்டுமல்லாமல் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மகாநாட்டின் பலனக மறுதினம் சகல பத்திரிகைளிலும் தமிழர்களுக்கு ஆதரவாக கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அது மாத்திரமன்றி சுவிஸ் தொலைக்காட்சியும், வானெலியும் எனது பேட்டிக்கு முக்கியத்துவம் கொடுத்தன.

(இதற்கு சான்றுக சில பத்திரிகைகளை திரு. அமிர் என்னிடம் காண்பித்தார். அனைத்து பத்திரிகை முன் பக்கத்திலும் படத்துடன் கூடிய பேட்டி பிரசுரிக்கப்பட்டிருந்தது. சுவிஸின் முன்னணி பத்திரிகையான 'பிலிக்' "TAMIL CHIEF ASKED: DON'T SEND THE ASSILUM SEEKERS TO HELL'' என்ற தலைப்புடன் முற்பக்க தலைப்பில் படத்துடன் வெளியிட்டிருந்தது. (இவற்றிலிருந்து அமிரின் விஜயத்தில் குறிப்பிடக்கூடிய வெற்றி இருப்பதாகத் தோன்றுகின்றது.)

கேள்வி: இத் தாக்கம் மற்றைய நாடுகளிலும் பிரதிபலிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றதா?

பதில்: ஆம். இப் பத்திரிகைச் செய்திகளின் பின் ஜேர்மன் பிஷப் கமிட்டி எடுத்த தீர்மானத்தின் படி அவர்கள் கனேடியன் சேர்ச் (Canadian Church) உறுப்பினர்களுக்கு தமிழ் அகதிகள் திருப்பப்படுவதை எதிர்க்கும்படி கோரியுள்ளனர். மற்றும் எனது விஜயத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை வன்மையாக கண்டித்து பிரேசிலிலுள்ள இலங்கை தூதுவர் கடிதமொன்றை சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எழுதியுள்ளார். பிரேசில் இலங்கை தூதுவர்தான் தற்போது சுவிஸ்ஸிற்கும் தூதுவராக கடமையாற்றிக்கொண்டிருக்கிறர். இக் கடிதத்தில் அவர் திரு. அமிர்தலிங்கத்திற்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம் தனக்கும் தரப்படல் வேண்டுமன கேட்டுள்ளார்.

**பேட்டி கண்டவர்:**
**ர. ஜெ. கொன்ஸ்ரன்ரைன்**
**(ஈழமுரசு லண்டன் நிருபர்)**

கேள்வி: நீங்கள் சுவிஸிலிருந்து அமெரிக்கா சென்றதாக அறிந்தேன், அதற்கான காரணம் என்ன?

பதில்: அமெரிக்காவிலிருக்கும் 'ஈழத் தமிழ் சங்கம்' தனது வருடாந்த மாநாட்டை கூட்டியது. அதற்கு சகல விடுதலை இயக்க பிரதிநிதிகளையும் எம்மையும் கலந்து கொள்ளும்படி கேட்டிருந்தார்கள்.

கேள்வி: முன்னைநாள் கூட்டணி பா. உறுப்பினர்களின் கொலை மக்களுக்கு பெரும் 'மர்மாக' உள்ளது பாதிக்கப்பட்ட உங்கள் கட்சி, இது தொடர்பாக மக்கள் முன் சரியான விளக்கத்தைக் கூற தவறி விட்டது. கூட்டணியின் மௌனத்திற்கு காரணம் என்ன?

பதில்: (சற்று யோசனையின் பின்,) ஒரு தீவிரவாத இயக்கம் செய்தது என்பதில் துளியேனும் சந்தேகமில்லை!!

கேள்வி: அனைத்து முன்னணி இயக்கங்களும் இதை மறந்து விட்டனவே?

பதில்: எனினும் ஈழதேசிய விடுதலை முன்னணியிலுள்ள (ENLF) இயக்கமொன்றிலேயே சந்தேகப்பட வேண்டியுள்ளது.

கேள்வி: அது யார் என்பதை கூற முடியுமா?

பதில்: திட்டவட்டமாக கூற முடியாது! கூற விரும்பவில்லை!

கேள்வி: இதை அரசகூலிகள் செய்ததாக குற்றஞ் சாட்டப்படுகின்றதே?

பதில்: நம்மை நாமே ஏமாற்றுகின்ருேம்!!

கேள்வி: ENLF உடன் நீங்கள் ஏன் இதைப்பற்றி உத்தியோக பூர்வமாக பேசவில்லை?

பதில்: ஆம் நேரடியாக பேசவில்லைத்தான் எனினும் பல விடுதலை இயக்க லண்டன் பிரதிநிதிகளை சந்தித்த போது அவர்கள் அதை மறுத்தது மட்டுமல்லாமல் வன்மையாகக் கண்டித்தனர்.

கேள்வி: புலிகள் செய்ததாக வெளிநாட்டு- உள்நாட்டு பத்திரிகைகள் குறிப்பிட்டனவே? அதை மறுக்கிறீர்களா??

பதில்: மறுக்கக் கூடிய நிலைமையில் நாம் இல்லை. ஆனல் ஈ. தே. வி. மு. யில் உள்ள இரண்டு இயக்கங்களில் மக்களுக்கு சந்தேகம் உள்ளது. அவ்வளவு தான்!

கேள்வி: இக் கொலைகளினல் தமிழ் இனத்திற்கும். த. வி. கூட்டணிக்கும் ஏற்பட்ட சில பாதிப்புகளை கூறுவீர்களா?

பதில்: எமது இனத்தைப் பொறுத்த வரை இவர்களுடைய சேவையை இழந்தது மட்டுமல்ல எமக்குள்ளே பெரும் பிளவு உள்ளதென்பதை உலகிற்கு வெளிப்படையாகக் காட்டி விட்டோம். இதனல் இப்போது இயக்கங்களிடையே அதிகாரப் போட்டி நிலவுகின்றதாக கருத்து நிலவி வருகின்றது. இதை இலங்கை அரசாங்கம் தமக்குச் சாதகமாகபயன்படுத்தி வருகின்றது.

கூட்டணியைப் பொறுத்த வரை இயக்கப் பணியை முக்கியமாக செய்து வந்த ஒரு சிலரில் இவர்கள் இருவரையும் முக்கியமாகக் குறிப்பிடலாம். இவர்களின் மறைவால் எமக்குப் பெரும் பாதிப்பு என்பதனை தெரிவிக்க விரும்புகிறேன். அதிலும் முக்கியமாக எமது இயக்கத்தை சேர்ந்தவர்கள் சுதந்திரமாக செல்ல முடியாமலுள்ளது அது எமக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பெனத் தான் கூற வேண்டும்.

கேள்வி: இக்கொலைகளை செய்தவர்களுக்கு எமது பத்திரிகை மூலமாக ஏதாவது வேண்டுகோளை விடுகக விரும்புகின்றீர்களா?

பதில்: ஆம் விரும்புகிறேன், இக்கொலையை செய்த விடுதலை இயக்கமொன்று எனத் தெரிந்த பின்பும் அவர்களுடன் ஒற்றுமைப்பட்டு செயற் பட முன் வந்தது எமக்கு விடுதலை முக்கியமே தவிர தனிப்பட்ட குரோதங்கள் முக்கியமல்ல என்பதற்காகவே. இதனல் இவ்

... 5ம் பக்கம் பார்க்க

## இருவாரகால கலவரம் முடிவுற்றது

# தென்யேமன் அரசு கவிழ்ப்பு

# பிரதமர் பதில் ஜனாதிபதி

(ஏடன்)

**தெற்கு யேமனில் கடந்த இருவார காலமாக நடைபெற்று வந்த புரட்சிக் கலவரங்கள் முடிவுற்று, அமைதி நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது: இதன் அரசாங்க ஆட்சியிலுள்ள மார்க்ஸிஸ குழுக்கள் இடையே ஏற்பட்ட சர்ச்சைகளால் ஜனாதிபதிக்கு எதிராக சதி முயற்சி ஏற்பட்டு அதனால் கலவரங்கள் ஆரம்பமாகியது தெரிந்ததே.**

தெற்கு யேமனில் நடைபெற்ற கலவரங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஜனாதிபதி அலி நசீர் முகமட் எதிர்ப்பு மார்க்ஸிஸ குழுவின் கட்டுப்பாட்டில் நாடு இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது சோவியத் யூனியனில் தங்கியுள்ள பிரதமர் ஹைதர் அபூபக்கர் அல் அஸாஸ் நாட்டின் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அலி நசீர் முகமட் நீக்கப்பட்டதாகவும் மார்க்ஸிஸ மத்திய குழு அறிவித்தது.

இதேவேளை இருவாரகாலச் சண்டையில் சுமார் பதினோராயிரம் பேர் மரணமாகியிருக்கலாம் என சில செய்திகள் கூறுகின்றன.

## பிரான்ஸில் எயிட்ஸ்

(பிரான்ஸ்)

எயிட்ஸ் நோய் பிரான்ஸ் நாட்டிலுள்ளவர்களுக்கே அதிகம் இருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட பிரிட்டன், மேற்கு ஜேர்மன் நாடுகளிலும் இது பரவியுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் கடல் பகுதியில் இரு கப்பல்கள் மோதின

(லண்டன்)

பிரிட்டனின் வடபகுதி கடலில் ஒல்லாந்து இழுவைக் கப்பலும், கிரேக்க எண்ணெய்க் கப்பலும் மோதியதாக ராய்டர் அறிவித்தது.

இந்த மோதலினால் கிரேக்க எண்ணெய்க் கப்பலில் உள்ள சில மசகு எண்ணெய் பீப்பாக்கள் தீப்பிடித்துள்ளன. சில இடத்தில் எண்ணெய் கசிந்து வெளியேறுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மீட்பு வேலைகள் நடைபெறுகின்றன. உயிர்ச் சேதங்கள் பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை.

## ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆதரவாளர் மோதல்

# மணிலாவில் தேர்தல் பிரசாரம் 22 சம்பவங்களில் 12 பேர் பலி!

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான பிரச்சார வேலைகளின் போது இடம்பெற்ற அசம்பாவிதங்களில் இதுவரை பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் ஜனாதிபதி மார்க்கோஸின் ஆதரவாளர்களுக்கும் இடையிலேயே இந்த அசம்பாவிதங்கள் ஏற்பட்டுள்ளன. இருபத்திரண்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

மணிலாவின் வடக்கே சிலர் பதுங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் எதிர்க்கட்சியினரின் காரில் சென்றவர்கள் சிலர் காயமடைந்துள்ளனர்.

## ஜனாதிபதி ஒக்கல்லோ ஆட்சி கவிழ்ப்பு

# உகண்டாவில் கிளர்ச்சியாளர் வெற்றி அரச துருப்புகள் பின் வாங்கினர்

(கம்பாலா)

உகண்டாவில் தேசிய விடுதலைப் படையினர் அங்கு இடம்பெறும் சண்டையில் முன்னேறி வருவதாகவும், அரச துருப்புக்கள் தப்பியோடியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கம்பாலா நகரின் பெரும்பகுதி கிளர்ச்சிக்காரர்களிடம் இருப்பதாக தெரிகிறது.

இந்தக் கலவரங்களால் பலர் அகதிகளாகத் தேவாலயங்களிலும, பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். வீதிகளில் பலரது சடலங்கள் தலைகள் வெட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றதாகவும் எங்கும் இரத்தக்களரிய காட்சியளிப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. ஜனாதிபதி ஒக்கலோ நிலை இன்னும தெரியவில்லை.

## சுவிஸிலுள்ள....

...4ம் பக்கத் தொடர்ச்சி

நெருக்கடியான நிலைமையால் நடந்து முடிந்தவற்றை மறந்து மீண்டும் ஒற்றுமைப்படுவோம், இவவேண்டுகோளினையே நான் சம்மந்தப்பட்ட இயக்கங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

கேள்வி: இயக்கங்களின் முக்கிய பேச்சாளர் ஒருவரை நான் இங்கு சந்தித்த போது, கூட்டணி சார்பில் நீங்கள் இந்திய அரசிடம் மாற்றுத் தீர்வொன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும் அது தமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும் சொன்னார். இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்: ஆம், நான் தெரிவிக்கவில்லைதான். எம்மால் தெரிவிக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் எம்மிடம் தாம்பேச விரும்பவில்லையென தமிழ் நாட்டு அமைச்சிடம் தெளிவாகக் கூறி விட்டனர். நிலைமை இப்படியிருக்கும் போது நாம் எப்படி அவர்களுடன் எமது முடிவுகளை கலந்து ஆலோசிப்பது? இதை அவர்கள் கடந்த அக்டோபர் 6ம் திகதி புதுடில்லியில் வைத்து அறிவித்து விட்டனர்.

கேள்வி: அதற்குப் பின் நீங்கள் ENLF உடன் சந்திக்கவில்லையா?

பதில்: இந்திய அரசாங்கம் அனைவரையும் ஓர் குறைந்த பட்ச கோரிக்கை தரும்படி கேட்டது. ஆனால் ENLF தமது கருத்தை தமிழக மின் துறை அமைச்சர் திரு ராமச்சந்திரனிடமும், திரு ரமேஷ் பண்டாரியிடமும் கூறினர். பின்னர் திரு. ராமச்சந்திரன் எம்மை அழைத்து ENLF இன் கருத்தைக் கூறினார்.

கேள்வி: இதில் இயக்கங்கள் தெரிவித்த கருத்து என்ன என்பதை தெரிவிக்க முடியுமா?

பதில்; ஆம், ENLF ஓர் மாற்றுத் தீர்வை சமர்ப்பிக்க விரும்பவில்லையெனவும், ஆனால் மற்றவர்கள் ஏதும் சமர்ப்பித்து பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தால் தாம் எதிர்க்கவில்லையெனவும் கூறினார்கள். இதை ENLF எழுத்து மூலமாக கொடுத்துள்ளது.

கேள்வி: நீங்கள் வாசித்தீர்களா?

பதில்: ஆம், திரு. ராமச்சந்தரன் எம்மிடம் காண்பித்தார்.

கேள்வி: இவ்மாற்றுத்தீர்வை நீங்கள் ஏன் இன்னும் வெளிவிடவில்லை?

பதில்: இவ் தீர்வு இலங்கை அரசிடம் சமர்ப்பக்கப்பட்டு முற்றாக இலங்கை அமைச்சரவையில் ஆராயப்பட்ட பின் தான் இதை வெளியிடுமாறு இந்திய அரசாங்கம் எம்மைக் கேட்டுக் கொண்டது.

கேள்வி: இதை இலங்கை அரசாங்கம் வெளிவிடக் கூடும் அல்லவா?

பதில்: இல்லை, இதை தற்போது வெளிவிடுவது புத்திசாலித்தனமல்ல என இந்திய அரசாங்கம் இலங்கையை கேட்டுள்ளது.

(மிகுதி நாளை)

## மாநகர சபை ஆணையாளர் கேட்கிறார்

# சூழ்நிலை சரியில்லையென்று திட்டங்களை பின்போடுவதா

(அரியாலை)

"சூழ்நிலை காரணமாக மனித சமுதாயத்தின் முன்னேற்றம் தடைபெறக்கூடாது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வியட்னாமிய மக்கள் போராடும் வேளையில் பல கட்டடங்கள் அழிக்கப்பட்ட போதும் பல கட்டடங்களைக் கட்டினார்கள். மாநகர சபையின் புதிய கட்டடத்தைச் சூழ்நிலை சரியில்லாதபடியால் பொறுத்துக் கட்டினால் என்னவென்று கேட்கிறார்கள். யாழ்ப்பாணத்தைக் கடைசியாக ஆண்ட சங்கிலி மன்னன் இராசதானிக்கு அருகில் இப்புதிய கட்டடம் அமைப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டும். இப்பிரச்சினையான நேரத்திலும் வீடு கட்டுகிறார்கள், திருமணம் செய்கிறார்கள். சூழ்நிலை சரி இல்லை, சரி இல்லை என்றால் எப்போது சரிவரும்? இச்சனசமூக நிலையம் நல்ல நிலையமாக, நல்வழிப்படுத்துகிற நிலையமாக நடைபெற வேண்டும். பாரதியின் பெயர் தாங்கி நிற்கிற இந்நிலையம் சுதந்திர இலக்கிய வரலாற்றில் பாரதி சாட்டிய வீர வரலாறு படைக்கும் நிலையமாக இயங்கவேண்டும்."

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு.சீ.வி.கே. சிவஞானம் அவர்கள் நாயன்மார்கட்டு பாரதி மன்றம் சனசமூக நிலையப் புதிய கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். நிலையத் தலைவர் திரு ஞா. அலோசியஸ் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. திரு. வே. முத்துராசா மங்கள விளக்கேற்றினார். நிலையக் கொடியை டாக்டர் என். விஜேந்திரன் ஏற்றி வைத்தார். புதியகட்டடத்தை திரு. சீ. வி கே. சிவஞானம் திறந்து வைத்தார். நிலைய மாதர் கீதம் இசைத்தனர். நிலையச் செயலாளர் திரு இ. மயில்வாகனம் வரவேற்புரை நிகழ்த்தினார். இவ்விழாவில் டாக்டர் என். விஜேந்திரன் அவர்கள் குறிப்பிட்டதாவது:-

"ஓர் இனத்தின் வளர்ச்சி இளைஞர்களின் விழிப்புணர்ச்சியில் தங்கியுள்ளது. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை அச்சமுதாய இளைஞர்களின் விழிப்புணர்ச்சியைக் கொண்டு மதிப்பிடலாம். மாநகர சபைக் கட்டடம் நல்லூரில் நிறுவப்படத்தான் போகிறது" என்றார்.

வலி. கிழக்கு ப. நோ. கூ. சங்க இயக்குநர் திரு. எஸ். நவரத்தினம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"சுதந்திர வரலாற்றிலும், சமுதாய வரலாற்றிலும் பாரதி முதல் மனிதன். தனக்கென வாழாமல் தன் இனத்திற்காக வாழ்ந்த உத்தம கவிஞன். வாசிகசாலையை நடத்தும்பொழுது பல விமர்சனங்கள் வரும். ஆனால் விட்டு விட்டு ஓடக்கூடாது" என்றார்.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கச் செயலாளர் திரு. சோ. தேவராசா அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"டச்சுக்காரர் கட்டிய கோட்டை இப்பொழுது புது வடிவம் பெற்றுள்ளது, சுதந்திரமாகச் சுடவே புதிய சட்டங்கள் ஆக்கப் பெற்றுள்ளன. மனித உரிமைகளை மீறி ஆட்சி நடத்த முடியாது. சொந்த மக்களை, நாட்டைக் காப்பாற்ற வந்துள்ள இவர்களைத் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்தும், தேசிய மட்டத்தில் இருந்தும் ஒதுக்கி, அழிக்கும் இவ்வேளையில் முழு மக்களும் ஐக்கியப்பட வேண்டும். கட்டடங்கள் எரிக்கப்படும் நேரத்தில் இப்படியான நூலகங்கள் எரிக்கப்படுகின்றன. தமிழ் மக்களுக்குக் கல்வி அவசியம்" என்றார்.

திரு.கே செந்தில்வேல் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

அநேக சனசமூக நிலையங்களுக்குப் பாரதியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பாரதி இந்த நூற்றாண்டில் தமிழ் மக்கள் மத்தியில் அதுவும் சாதாரண மக்கள் மத்தியில் நன்கு பெயர் பெற்றவன். பல்வேறு ஆற்றல் மிக்க சமுதாய முன்னோடியான பாரதி சமுதாயத்தின் கீழ் நிலையில் இருந்தவர்களை மேலே வரச் செய்தான் பாரதி ஓர் ஆன்மீகவாதியாக இருந்த போதும், ஏழைகளுக்குக் கல்வி கற்பிப்பதை நல்ல சேவை என்றான். பிற்போக்குத்தனத்தை இப்பொழுது சுலபமாக எதிர்க்கலாம். ஆனால் பாரதி காலத்தில் எதிர்க்கமுடியாது. இதனையேயே குறைந்த, பின்தங்கிய மக்கள் மத்தியில் பாரதியின் பெயர் நிலைநாட்டப்படுகிறது" என்றார்.

இவ்விழாவில் திருவாளர்கள் வே. முத்துராசா, த. சிவலிங்கம், எஸ். நாகரத்தினம் ஆகியோரும் உரையாற்றினார்கள். செல்வன் இ. உதயகுமார் நன்றியுரை ஆற்றினார்.

## வவுனியா அகதிகளின்

# புனர்வாழ்வு வேலைகளுக்கு கச்சேரியில் தனி அலுவலகம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலிருந்து கடந்தகாலச் சம்பவங்களினால் இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வு தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபர், உதவி அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் சந்திப்பின் விளைவாகச் சிலமுடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்து இடம்பெயர்ந்து சென்றுள்ள வவுனியா மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது திரும்பவும் வந்து குடியமர்வோருக்கு இரண்டு மாதங்களுக்குப் போதுமான பங்கீட்டு உணவுப் பொருட்களும் தொழில் தொடங்குவதற்கு உதவியாக ரூபா ஆயிரம் ரொக்கப் பணமும் வழங்கப்படும். குடியிருக்கும் வீட்டைத் திருத்தி அமைக்க சர்வோதய அமைப்பு, போரூட் இயக்கமும் கூட்டாக உதவ முன்வந்துள்ளன.

புனர்வாழ்வு சம்பந்தமான நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள வசதியாக வவுனியா கச்சேரியில் இதற்கென விசேட அலுவலகம் ஒன்றும் திறக்கப்படவுள்ளது திங்கள் முதல் இவ்வலுவலகம் செயலாற்றத் தொடங்கும். இங்கு போரூட் தாபனப் பிரதிநிதி திரு. சற்குணராசா, சர்வோதய பிரதிநிதியும், முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளருமான திரு. றேவதன் மற்றும் லயனல் ஜயதிலக ஆகியோர் கடமையாற்றுவர்.

இவர்களுடன் தொடர்பு கொண்டு புனர்வாழ்வுக்குத் தேவையான உதவிகளைப்பெறுமாறு சர்வோதய வடமாகாண வெளிக்கள இயக்குநர் திரு. க. கதிரைமலை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழமுரசு

## ஹெலிகப்டர் தாக்குதல்கள் பற்றி தூதுவர் டிக்ஸிற்றிடம் புகார்

யாழ்ப்பாணத்தில் தினசரி ஹெலிகப்டர் மூலம் நடத்தப்படும் தாக்குதல்கள் பற்றியும், புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்தால் மக்கள் அடைந்துவரும் இன்னல்கள் பற்றியும் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. என். இராஜேந்திரம், இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றிடம் முறையிட்டார். முழு விபரங்களையும் கேட்டறிந்த தூதுவர் திரு. டிக்ஸிற் இது தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் தாம் பேசுவதாக திரு. இராஜேந்திரனிடம் உறுதியளித்தார்.

தெல்லிப்பளையில் நேற்றும் வானத்தில் ரோந்து:

# ஹெலிகப்டர் சப்தத்தால் நோயாளி மரணம்; ஊழியர்கள் வரவின்றி ஆஸ்பத்திரி பாதிப்பு!

(ஏழாலை)

நேற்றுக் காலையும் தெல்லிப்பளை வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளில் ஹெலிக்காப்டர் தாழப்பறந்து ரோந்து நடவடிக்கையிலீடுபட்டது. இதேவேளை நிலத்திலிருந்து ஏவப்பட்ட மூன்று குண்டுவெடிப்புச் சத்தத்தைத் தொடர்ந்து கெலிக்கப்டர் மேலெழுந்து முகாமையடைந்தது.

இந்த ரோந்து நடவடிக்கையால் தெல்லிப்பளை வைத்தியசாலை பெரிதும் பாதிக்கப்படுகிறது. நாளாந்தம் சராசரி 800 நோயாளர்கள் வந்து போகும் நிலை மாறி எண்பது பேர்தானும் இங்கு வருவதில்லை.

நேற்று சிகிச்சைக்காக வந்த இருதய நோயாளி ஒருவர் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரேயே கெலிக்கப்டர் சத்தத்தால் மரணமடைந்துமுள்ளார். முறைமாற்று வேலையீடுபடும் வைத்தியசாலை ஊழியர்கள் பலர் வேலைக்கு வராது லீவில் நிற்பதால் வேலையீடுபட்டுள்ளோர் தொடர்ந்து 4, 5 நாட்களுக்குக் கடமை புரிந்து வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வாட்டுகளில் இருக்கும் நோயாளர்கள் தமக்குத் தேவையான மாவகை, சீனி என்பனவற்றை வாங்கிக் கொள்ள முடியாதபடி கடைகள் யாவும் பூட்டப்பட்டிருக்கின்றன-பார்வையாளர் தொகையும் மிகக்குறைந்துள்ளது. வீதிகளில் பயணம் செய்வோர் அடிக்கடி வானத்தை அண்ணாந்து பார்க்கின்றனர்.

அண்ணாமலையின் அறிக்கை:

## அப்பாவி மக்களை கொல்ல புதிய சட்டம் வழிவகுக்கும்

"இனவெறி பிடித்தாடும் இவ் அரசு இதுவரை கொண்டு வந்த ஈவிரக்கமற்ற அழித்தொழிப்புக்கள் போதாதென்று வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை சுற்றி 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை பிரகடனப்படுத்தியுள்ளது. அது மட்டுமன்றி பீரங்கி போன்ற கனரக ஆயுதங்களைப் பாவிப்பதற்கும் இராணுவத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அப்பாவி மக்கள் மென்மேலும் கொன்று குவிக்கப்படுவது திண்ணம்." என ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத்தை சேர்ந்த ஆ. க. அண்ணாமலை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"அன்னையர் முன்னணி கச்சேரி முன்பாக நடாத்திவரும் மறியல் போராட்டத்திற்கு வடபிராந்திய தொழிற்சங்க கூட்டுக்குழு தனது பூரண ஆதரவை வழங்கி வருகின்றது. தமிழ் மக்களை கொன்று குவிக்கும் இவ் அரசு தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் அனைவரையும் நசுக்கி வருகின்றது. தனது தேர்தல் வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்ட அரசு ஒன்றன்பின் ஒன்றாக இனக்கலவரங்களை கட்டவிழ்த்து விட்டு தமிழ் மக்களை துன்பப்படுத்தி வருகின்றது.

வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழு ஐந்து அம்ச கோரிக்கைகளின் தொடர்பாக புதன்கிழமை நடாத்தவிருக்கும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம். என இங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## சிறுவன் சடலத்தை வீதியில் வைத்து நடத்திய மறியல்

(வேலணை நிருபர் கே. வி. கே. ஜெயச்சந்திரன்)

ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டிற்கு கொண்டு வரப்பட்ட சடலமொன்று பின்னர் அவ் வீட்டிலிருந்து தெரு வீதிக்கு கொண்டுவரப்பட்டுமக்களிற்கு காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று புங்குடுதீவில் நடைபெற்றது. மினிபஸ் ஒன்றினால் மோதப்பட்டு இறந்த பா. அரிச்சந்திரன் (வயது 15) என்ற மாணவனது சடலமே புங்குடுதீவு பிரதான வீதியின் மத்தியில் வைக்கப்படடு பந்தல் போடப்பட்டு வீதி தடை செய்யப்பட்டிருந்தது.

இவரை மோதிய மினிபஸ் சொந்தக்காரர் நஷ்ட ஈடாக குறிப்பிட்ட பணத்தை கொடுக்க சம்மதித்து, பின்னர் கொடுக்கமறுத்த காரணத்தினாலேயே வீட்டிலிருந்து சடலம் நடுவீதிக்கு கொண்டுவரப்பட்டு உறவினர்களால் வீதித்தடைப் போராட்டம் நடாத்தப்பட்டது இத்தடையால் சில மணித்தியாலங்கள் போக்குவரத்து தடைப்பட்டது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேவாலயத்திற்கு தைப் பூசத்திற்காக செல்லவிருந்த யாத்திரிகளும், மற்றும் புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு பிரயாணிகளும் இத்தடையினால் பாதிபடைந்தனர்.

## 29-ம் திகதி ஊர்வலத்தில் ஆசிரியர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு அழைப்பு

ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறு கோரி வட பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு நாளை மறுதினம் நடத்தவுள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சகல ஆசிரியர்களும் எவ்வித பேதமுமின்றிக் கலந்து கொள்ள வேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், இலங்கை ஆசிரியர் சங்கமும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. வே. சிவராசாவும், தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவமும் கூட்டாக வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில், "1000 மீட்டர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை ரத்துச் செய்து வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நின்றும் இராணுவத்தை மீள அழைத்து, ஈழத் தமிழினம் தன்னுதிக்கத்துடன் வாழும் நிலை ஏற்படும் வரை எமது போராட்டம் ஓயாது" எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது

மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். பெருமாள் கோவிலடியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

## 54 அடி உயர மணிக்கோபுரம்

நேற்று மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் தைப்பூசவிழாவின்போது புதிதாக இரண்டு இலட்சத்து பதின் மூவாயிரம் ரூபாசெலவில் அமைக்கப்பட்ட 54 அடி உயர மணிக்கூட்டுக் கோபுரத்தில் மணி ஏற்றி வைக்கப்பட்டது. இந்த மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு செலவான பணத்தை மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மலேசியாவில் வசிப்பவருமாகிய வைரவப்பிள்ளை பாலகிருஷ்ணன் அவர்கள் கொடுத்துள்ளார்கள். இம் மணியின் நிறை 1200 றாத்தலாகும்.

## அம்புலன்ஸ் வரமறுப்பு

யாழ். அரசினர் வைத்தியசாலையின் உபயோகத்திற்கென போதனாவைத்திய சாலைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டியை இங்கு தருவிப்பதில் தற்பொழுது சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக அறியப்படுகின்றது.

மேற்படி அன்புலன்ஸ் வண்டியை யாழ்ப்பாணம் எடுத்துவரவென இங்கிருந்து சாரதி ஒருவர் கொழும்புக்கு அனுப்பப்பட்ட சமயம் யாழ்ப்பாணத்தில் தற்பொழுது தோன்றியுள்ள நிலையை காரணம் காட்டி அன்புலன்சை அவரிடம் ஒப்படைக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

### லலித் திடீர்...

கலந்துரையாடியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர், வவுனியா, மன்னார் முகாம்களுக்கும் விஜயம் செய்த அமைச்சர் கச்சதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளையும் படகில் சென்று பார்வையிட்டார்.

கடைசியாக மன்னாருக்குச் சென்ற அமைச்சர் அத்துலத்முதலி அப்பகுதி மீனவர்கள் மீனைச் சந்தைப்படுத்துவதற்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

### திருநகா...

ருஷ்ணன் (28), மு. முருகதாஸ் (20), மு. அரியதாஸ் (22) ஆகியோரே கைதானவர்களாவர்.

### சார்ஜன்ட்...

காலையில் நடைபெற்ற இச் சம்பவத்தையடுத்து ஓட்டுசுட்டான் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. நேற்றுப் பிற்பகல் இப்பகுதியில் குண்டுச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டன.

### ஊர்வலம்,...

ளர் திருமதி நிர்மலா பாலரட்ணம் விடுத்துள்ள அறிக்கையில், பாதுகாப்பு வலயப் பிரகடனம் தமிழ் மக்களின் உயிர், உடமைகளைப் பறிப்பதை நியாயப்படுத்துவதாகும். இதனை இப் பிரதேசத்தில் வாழும் ஒவ்வொருவரும் எதிர்க்கின்றனர். எனினும் அந்த எதிர்ப்புணர்ச்சி தனித்தனியாக இல்லாமல் ஒன்றிணைக்கப்பட்டுத் திரளும்போது தான் பலமிக்க சக்தியாக உருவாகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சனி, ஞாயிறு தினங்களில் நிறுத்தப்பட்டிருந்த அன்னையர் முன்னணியின் கச்சேரி மறியல்போராட்டம் இன்று மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

### சோதனைமேல்...

நிலயத்தை சுற்றி வளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது அங்கிருந்த எல்லோரும் புகையிரத நிலைய அறையொன்றினுள் ஓடி ஒழிந்தோம். அச்சமயம் புகையிரத பாதையில் நின்ற இரு படையினர் அவ் அறையை நோக்கி பல தடவைகள் சுட்டார்கள்."

மேற்கண்டவாறு கிளிநொச்சி ரயில் நிலைய சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆரோக்கியபுரத்தைச் சேர்ந்த நல்லையா (38) ஈழமுரசுக்கு தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் இவரது ஒன்பது வயது மகன் ரூபதாசன் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றொரு மகனான ஐந்து வயதினையுடைய கமலதாசன் கையில் காயமுற்ற நிலையில் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரின மனைவி நாகேஸ்வரி (36) யும் இச் சம்பவத்தில் படுகாயமுற்று வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றார்.

இக்குடும்பம் முன்னர் மதவாச்சியில் வசித்து வந்ததாகவும், கலவரத்தின்போது இவர்களது வீடு அங்கு தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து கிளிநொச்சி ஆரோக்கியபுரம் அகதி முகாமில் இவர்கள் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவ தினம் மதவாச்சியிலுள்ள தமது காணியைப் பார்ப்பதற்கு செல்வதற்காகவே இவர்கள் புகையிரத நிலையம் வந்திருந்தார்கள்.

### ஆஸ்பத்திரி...

இராணுவமுகாமிலிருந்து தீர்க்கப்படும் வேட்டுக்கள் வைத்தியசாலையையும், வைத்தியர், தாதியர் விடுதிகளையும் தாக்கி வருவதினால் இங்கு தங்கியிருந்து கடமைபுரிய வைத்தியசாலை ஊழியர்கள் அச்சம் காட்டிவருகின்றனர். அத்துடன் வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் பாதுகாப்பு குறித்தும் அச்சம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் தற்பொழுது மிக கடுமையான நோயாளர்களுக்கு மட்டுமே வைத்தியசாலை விடுதியில் தங்கவைத்து சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுகின்றன. வைத்தியர்களும் ஊழியர்களும் விடுதிகளில் தங்கியிருக்க தயக்கம் காட்டி வருவதினால் வைத்தியசாலை நிர்வாகத்தை நடாத்திச் செல்வதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று நடைபெறவுள்ள ஆலோசனைக் கூட்டத்தில் வைத்தியர்கள், தாதியர்கள் மேற்கொண்டு எடுக்கவேண்டிய சில நடவடிக்கைகள் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

### சுட்டுக்...

பாரி எஸ். அழகையா (48), முத்தையா மகேந்திரன் (26) ஆகியோரது சடலங்கள் நேற்று அடையாளம் காணப் பட்டன.

இரண்டு குழந்தைகளுடன் சுட்டுக்கொல்லப்பட்ட பெண்மணி முரசுமோட்டையைச் சேர்ந்தவரென்று கூறப்படுகின்றது. மற்றொருவரின் சடலம் அவரது உறவினர்களால் உடனடியாக வட்டக்கச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சடலங்களைப் பார்ப்பதற்காகவும், அடையாளம் காண்பதற்காகவும் பெரும்தொகையானவர்கள் நேற்று ஆஸ்பத்திரி சென்றனர்.

கிளிநொச்சி சந்தைப் பகுதியில் இராணுவத்தினர் சூடு நடத்திய போது பலர் குளத்துக்குள் பாய்ந்து நீந்திச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. இப்பகுதியில் நேற்றும் பெரும் பதற்றம் நிலவியது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 27-01-86 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336